**EASTERN UNIVERSITY, SRI LANKA**
**Faculty of Commerce and Management**
**First Examination in Bachelor of Business Administration 2009/2010 and Bachelor of Economics - 2010/2011 (Proper/Repeat/Re-repeat) (Aug/Sept/Oct 2014) (External)**
**EXB/EXE 1052 Career Guidance**

13 OCT 2014

எல்லா வினாக்களுக்கும் விடை அளிக்குக. நேரம்: 02 மணித்தியாலங்கள்

---

**Q1.** **a.** வாழ்க்கைத்தொழிலின் இயல்புகளை (Characteristics of Career) அடையாளங்கண்டு நிரற்படுத்துக.

(04 புள்ளிகள்)

**b.** வாழ்க்கைத்தொழில் வழிகாட்டலின் அடிப்படையான ஐந்து சேவை வகைகளையும் (Five Basic Categories of Services) வகைப்படுத்துக.

( 10 புள்ளிகள்)

**c.** பிரபல்யமான வங்கியொன்றின் முகாமைத்துவ பயிலுனருக்கான (Management Trainee) நேர்காணலுக்கு (An Interview) நீர் முகங்கொடுக்க வேண்டியுள்ளது. அத்தருணத்தில் நீர் எவ்வாறு உம்மைத் தயார்செய்து கொள்வீர். விபரிக்குக.

(07 புள்ளிகள்)

**d.** சுயவிபரக் கோவையின் (Resume / Bio-data) முக்கியத்துவத்தினை விபரிப்பதுடன் தொழில் தேடலில் வலைப்பின்னலின் முக்கியத்துவத்தினையும் விளக்குக.

( 10 புள்ளிகள்)

**(மொத்தம் 25 புள்ளிகள்)**

**Q2.** **a.** 'ஒருவர் தன்னைப்பற்றி அறிந்து கொள்ளல் சிறப்பான வாழ்க்கைத் தொழிலைத் (a career) தெரிவு செய்ய அல்லது அதற்கான துறையைத் தெரிவு (career field) செய்ய உதவும்'. இக்கூற்றினை விபரிக்குக.

(07 புள்ளிகள்)

b. வணிக மற்றும் முகாமைத்துவ தொழில்துறையில் (field of Business and Management), நுழைவு நிலை/மட்டத் (entry level) தொழில் தேவைப்பாடுகளைத் (job requirements) தீர்மானிப்பதில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகளை விபரிக்குக.

(08புள்ளிகள்)

c. வாழ்க்கைத்தொழில் அபிவிருத்தியில் (career development) காணப்படும் நான்கு கட்டங்களையும் உதாரணங்களுடன் விபரிக்குக.

(10 புள்ளிகள்)

**(மொத்தம் 25 புள்ளிகள்)**

**Q3.** a. தொழில் தேடல் செய்முறையில் மென்திறனின் (soft-skills) முக்கியத்துவத்தினை விபரிக்குக.

(07 புள்ளிகள்)

b. வாழ்க்கைத்தொழில் சட்டகத்தின் முறைமையினைக் (career framework) குறிப்பிட்டு அதனுள் காணப்படும் மூலங்களை விபரிக்குக.

(08 புள்ளிகள்)

c. 'பல்கலைக் கழகத்தின் பட்டதாரிகள் தொழில் முயற்சியாளர்களாக / தொழிலை உருவாக்குபவர்களாக அல்லாது பொதுவாக அரச சேவைகளில் தொழிலினைத் தேடுபவர்களாகக் காணப்படுகின்றனர்'. இக்கூற்றினை நீர் ஏற்றுக் கொள்ளுகின்றீரா? காரணங்கள் தருக.

(10 புள்ளிகள்)

**(மொத்தம் 25 புள்ளிகள்)**

**Q4.** a. வாழ்க்கைத்தொழில் முகாமைத்துவப் பிரச்சினைகளையும் அவற்றுக்கான தீர்வுகளையும் சுருக்கமாக விபரிக்குக.

(05 புள்ளிகள்)

b. ஹொலண்ட்டின் கோட்பாட்டினை (Holland's Theory) ஆளுமை மற்றும் தொழிலிற்கான சூழ்நிலை என்பவற்றின் அடிப்படையில் விபரிக்குக.

(10 புள்ளிகள்)

c. எனியக்கிராம் சோதனையானது (The Enneagram Test) நபர்களின் ஒன்பது வகைகளை முன்வைக்கின்றது. இச்சோதனையினை உதாரணத்துடன் விபரிக்குக.

(10 புள்ளிகள்)

**(மொத்தம் 25 புள்ளிகள்)**